## *DEPOSITION OF WITNESSES*

### *(Chapter XXIII code of Criminal Procedure)*
### *IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI*

### *S.C. NO : 31/2018*

| | | |
|---|---|---|
| Deposition of witness for | - | PW - 1 |
| Name | : | திருமதி. பூங்கோதை |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| E-Mail ID | : | |
| Dated | : | 23.11.2020 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.11.2020.*

**முதல்விசாரணை:-**

நான் தற்போது செவலூாரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜா் எதிரியை எனக்கு தெரியும். ராதா என்னுடைய மகள். சம்பவ சமயத்தில் எனது மகள் 8-வது படித்துக்கொண்டிருந்தாா். அவருக்கு 15 வயது. பிறந்ததேதி நான் படிக்காததால் எனக்குத் தெரியாது. சுமாா் 15 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் என்னுடைய மகள் பள்ளிக்கு படிக்கச் சென்றாள். பள்ளிக்கு சென்றவா் திரும்பி வீட்டிற்கு வரவில்லை. என்னுடைய சின்ன மகள் மாலதி என்னுடைய மகள் ராதாவை சித்தப்பா பைக்கில் எற்றிச்சென்றதாக கூறினாள். ஆஜா் எதிரி எனது மகளுக்கு சித்தப்பா முறை. நான் என் மகளை காணவில்லை என்று ஒருமாத காலமாக தேடினேன். என்னுடைய இளைய மகள் ஆஜா் எதிரி அழைத்துச்சென்றதாக சொல்லியதால் பள்ளி தலைமைஆசிரியரிடம் சென்று நான் புகாா்கொடுத்தேன். அவா் காவல்துறையினரிடம்

செல்லும்படி சொன்னார். நான் பனையப்பட்டி காவல்நிலையத்தில் புகார்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அது அ.சா.ஆ.1. நான் தேடிப்பார்த்தபோது அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஆஜர் எதிரியுடன் என் மகளை அங்கும் இங்கும் பார்த்ததாக சொன்னார்கள். நான் என் மகளுக்கு ஆஜர் எதிரி சித்தப்பா முறை வேண்டும் என்பதால் வருத்தப்பட்டேன். நான் காவல்துறையினரிடம் என் மகளை உறவிர்கள் கூப்பிட்டு கேட்கும்போது, ஆஜர் எதிரியின் அண்ணன் மும்பையில் இருப்பதாக போலீசாரிடம் சொன்னேன். பனையப்பட்டி போலீசார் மும்பைக்கு சென்று ஆஜர் எதிரியையும் என் மகளையும் மீட்டுவந்தார்கள். பனையப்பட்டி போலீசாருடன் என் கணவரும் சென்றார். 2, 3 வருடங்கள் கழித்துதான் என் மகளை போலீசார் கண்டுபிடித்து அழைத்து வந்தார்கள். என் மகள் 5 வருடங்கள் கழித்து ஒரு குழந்தையுடன் வந்தார். என் மகளை நான் விசாரித்ததற்கு என் மகளை ஆஜர் எதிரி அழைத்துச்சென்று லாஜில் வைத்திருந்ததாகவும், பின்னர் மும்பைக்கு அழைத்துச்சென்றதாகவும் சொன்னார். என் மகள் காணாமல்போனபோது என்னுடைய தங்கையின் நகைகளான 5 பவுன் செயின், 3-1/2 பவுன் நெக்லஸ், 1/2 பவுன் தோடு, மோதிரம் 1/2 பவுன், டாலர் பாசிமணிபோல் உள்ளது ஒன்று ஆகியவற்றை எடுத்துச்சென்றுவிட்டார். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை</u>:-

எனது மகள் ராதாவிற்கு தற்போது திருமணம் ஆகிவிட்டது. இருந்தாலும் அவருடைய பிள்ளை என்னிடம் உள்ளது. எங்கள் ஊருக்கும், பனையப்பட்ட காவல்நிலையத்திற்கும் சுமார் 5 கி.மீ தூாரம் என்றால் சரிதான். எனது கணவர் என்னுடன்தான் இருக்கிறார். நான் காவல்நிலையத்தில் எனது மகள் காணாமல்போனது குறித்து எழுத்துமூலமாக புகார்கொடுத்தேன். என் மகள் மாலதி எழுதிக்கொடுத்தார். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. நான் ரேகைதான் வைத்தேன். என்னுடைய மகள் அது யாருடைய ரேகை என்று குறிப்பு வரைந்தார். என் மகள் புகாரில் அவர்தான் புகாரை எழுதினார் என்று எழுதி கையெழுத்து போட்டாரா என்றால், ஆமாம். எனது மகள் காணாமல்போனது குறித்து ஒருமாதம்

கழித்துதான் புகார்கொடுத்தேன் என்றால், ஆமாம். அதுவரை போலீசில் புகார்கொடுக்கவில்லை. நான் கொடுத்த புகாரில் எனது மகளை எங்கெங்கு தேடிப்பார்த்தோம் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். நான் புகார்கொடுத்த அன்றே போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால், விசாரித்தார்கள். புகாரை கொடுத்து இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தார்கள். அதன்பின்னர் மாதம் ஒருமுறையும், வாரம் ஒருமுறையும் போலீசார் வந்து விசாரித்தார்கள். அந்த சமயத்தில் அந்த வாக்குமூலங்களை எழுதிக்கொண்டார்களா என்று எனக்குத் தெரியவில்லை. என்னை போலீசார் விசாரித்தபோது எனது இளையமகள் மாலதி ஆஜர் எதிரி வாகனத்தில் ராதாவை ஏற்றிச்சென்றதாகவும், அதை அவர் பார்த்ததாகவும் அன்றையதினமே அதை என்னிடம் என் இளையமகள் மாலதி சொன்னதாகவும், நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் நான் என் மகள் படித்த பள்ளியில் தலைமை ஆசிரியரிடம் விசாரித்த விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியுடன் என் மகளை அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் பார்த்தாக சொன்ன விவரத்தையும் நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகளை நான் விசாரித்தபோது ஆஜர் எதிரி அவரை லாட்ஜில் வைத்திருந்ததாக சொன்ன விவரத்தையும் நான் போலீசார் என்னை மீண்டும் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் உடன் பிறந்த சகோதரியின் பெயர் சரசு. நகைகள் காணாமல்போனதாக நான் சொல்லியுள்ளேன். அந்த நகைகள் என் தங்கையின் நகைகள், அவருக்கு அந்த விவரம் தெரியும். நகை சம்மந்தமாக போலீசார் என் தங்கையை விசாரிக்கவில்லை. நான் சொல்வதுபோல் நகைகள் காணாமல்போனது, எனது தங்கையின் நகைகள் என்பது பொய் என்றாலும், அவ்வாறு நகைகள் காணாமல்போயிருந்தால் என் தங்கையை விசாரித்திருப்பார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய தங்கையின் நகைகள் எனக்கு வேண்டும். என்மீது பனையப்பட்டி காவல்நிலையத்தில் ஒரு குழந்தை இறந்தது சம்மந்தமாக வழக்கு போட்டார்களா என்றால், ஆமாம். அது சம்மந்தமாக என்னை போலீசார் கைது செய்திருந்தார்கள். நான் சொல்வதுபோல் என் மகள் காணாமல்போனதற்கும், எதிரிக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே என் மகள் எனக்கு தெரிந்து

காணாமல் போயிருந்தால் உடனடியாக காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது மகள் என்னுடன் கோபித்துக்கொண்டு அவரது தோழிகளுடன் இருந்தார் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*

**_DEPOSITION OF WITNESSES_**

***(Chapter XXIII code of Criminal Procedure)***
***IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI***

***S.C. NO : 31/2018***

| | | |
|---|---|---|
| Deposition of witness for | - | PW - 2 |
| Name | : | திருமதி. ராதா |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| E-Mail ID | : | |
| Dated | : | 07.12.2020 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.12.2020.*

**<u>முதல்விசாரணை</u>:-**

நான் தற்போது குழிபிறையில் வசிக்கிறேன். நான் 100 நாள் வேலைக்கு செல்வேன். அ.சா.1 என்னுடைய தாயார். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் எனது பக்கத்துவீட்டுக்காரர். 2002-ல் நான் 8-வது படித்தேன். அப்போது எனக்கு வயது 14. என்னை கடத்திச்சென்றதாக எனது தாயார் காவல்நிலையத்தில் புகார்கொடுத்திருந்தார். 11-வது மாதம் 2002-ல் தேதி ஞாபகம் இல்லை, நான் பள்ளியில் இருந்தபோது எதிரி வந்து என்னுடைய தாயாருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி என்னை புதுக்கோட்டை பஸ்சில் கூட்டிவந்து, பின்னர் ட்ரெயினில் அழைத்துச்சென்றார். கொஞ்ச நாட்கள் கழித்துதான் எனக்கு என்னை அழைத்துச்சென்ற இடம் பாம்பே என்று தெரியும். நான் எதிரியிடம் ஏன் என் அம்மாவிற்கு உடல்நிலைய சரியில்லை என்று கூறி என்னை வேறு எங்கே அழைத்துச்செல்கிறீர் என்று கேட்டபோது, உங்க குடும்பம் எங்களுடைய குடும்பத்தை கொஞ்ச கொடுமையா செய்கிறது,

அதனால்தான் நான் உன்னை அழைத்துச்செல்கிறேன் என்று எதிரி சொன்னார். எதிரி என்னை அங்கு எதிரிக்கு தெரிந்த ஒரு நண்பர் மூலம் ஒரு வீடு பிடித்து என்னை குடிவைத்தார். எதிரி எனக்கு போக வழியில்லாததால் நான் 8-வது படித்துக்கொண்டிருந்ததால் எனக்கு விவரம் தெரியவில்லை. எதிரி என்னிடம் தவறாக நடந்துகொண்டார். அதனால் நான் கர்ப்பமுற்றேன். எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பம்பாயில் எனக்கு தெரிந்த ஒரு உறவினர் இருந்தார். அவர் என்னுடைய மாமாவிற்கு நெருங்கிய உறவினர். அவர் பெயர் கோவிந்தராஜ். அவர் என்னை நான் யார் என்று விசாரித்தார். அப்போது நான் என்னுடைய மாமா பெயரை சொன்னேன். நான் இருந்த ரூமில் எதிரிதான் எங்கள் உறவினரை அழைத்துவந்தார். நான் என் மாமாபெயரை சொன்னவுடன் அவர் எனக்கு உறவினர் உன்னை உன் வீட்டில் விட்டுவிடவா என்று கேட்டார். நான் அப்போது கர்ப்பமாக இருந்ததால் அந்த உறவினர் எதிரியிடம் கூறி குழந்தையை கலைக்கச்சொன்னார்கள். ஆனால் மருத்துவரிடம் சென்றபோது குழந்தையை கலைக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். அந்த குழந்தைதான் எனக்கு பிறந்த ஆண் குழந்தை. என்னுடைய தாயார் நான் காணவில்லை என்று புகார்கொடுத்ததன் அடிப்படையில் போலீசார் பாம்பே-க்கு வந்தார்கள். அங்கு என்னை பார்த்து என்னை இங்கு அழைத்துவந்துவிட்டார்கள். எதிரி பிள்ளையை அழைத்துக்கொண்டு உன் அம்மாவுடன் செல்லாதே என்று சொன்னார், ஆனால் என் தாயார் அவருடன் என்னையும், என் குழந்தையையும் அழைத்துச்சென்றுவிட்டார். இந்த விவரங்களை போலீசார் விசாரணையில் நான் சொன்னேன்.

**(அரசு தரப்பில் சாட்சி முறையற்ற திருமணம் எதிரி தன்னை செய்தது குறித்து சாட்சியம் அளிக்காததால் இதுகுறித்து மட்டும் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி, அனுமதி கேட்டதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.)**

**அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையின் போது பாம்பேக்கு அழைத்துச்சென்று தாராவி என்ற இடத்தில் வீடுபிடித்து வாடகைக்கு எதிரி வைத்ததாகவும், அப்போது எங்கள் ஊரை சேர்ந்த கோவிந்தராஜ், பொன்னையா அவர்களை பார்த்ததாகவும், அவர்களிடம் நாங்கள் ஊரைவிட்டு

ஓடிவந்துவிட்டோம், திருமணம் செய்துகொள்ள உதவியாக இருக்கும்படி அவர்களை எதிரி கேட்டதாகவும், அப்போது என்னுடைய வயதை அவர்கள் கேட்டபோது எனக்கு 19 வயது முடிந்து 20 வயது நடப்பதாகவும், திருமணத்திற்கு ஆசீர்வாதம் செய்யும்படி கேட்டுக்கொண்டதன்பேரில் அவர்களும் சம்மதித்து ஒரு நல்லநாள் பார்த்து மட்டுங்கள்முருகன் கோவிலில் வைத்து அவர்கள் முன்னிலையில் எதிரி என்னை திருமணம் செய்துகொண்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னை எதிரி திருமணம் செய்துகொண்டார் என்றாலும், நான் தற்போது மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கர்ப்பமாக இருக்கும்போதுதான் கோவிந்தராஜ் என்னை பார்த்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>:-

எனக்கு திருமணம் ஆகவில்லை. நான் தற்போது வேறு ஒரு திருமணம் ஆன நபருடன் வசித்து வருகிறேன். (சாட்சி தன்னிச்சயைாக எதிரி மூலமாக தனக்கு மீண்டும் 2-வதாக ஒரு மகனும், 3-வது ஒரு மகளும் உள்ளதாகவும், எதிரி அவருடைய ஓனருடன் தன்னை தொடர்புபடுத்தி தன்னை விட்டுவிட்டு வந்ததாக சொல்கிறார்.) எதிரிக்கு என்னை விட்டுவிட்டு வந்தபிறகு திருமணமாகிவிட்டது. போலீசார் என்னை பாம்பேயில் விசாரித்தார்கள். பனையப்பட்டியிலும் போலீசார் என்னை விசாரித்தார்கள். நானும், என்னுடைய தாயாரும் பேசிக்கொள்வோம். அதிகமாக போக்குவரத்து கிடையாது. நான் வெளிநாடு சென்றுவந்துள்ளேன். எனக்கு ரேஷன்கார்டு இருக்கிறது. அதில் என் பிள்ளைகள் பெயர் உள்ளதா என்றால், உள்ளது. அதை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யமுடியும். கோவிந்தராஜ், பொன்னையா இருவரும் எனது உறவினர்களா என்றால், பொன்னையா எதிரிக்கு அண்ணன், கோவிந்தராஜ் எனது மாமாவிற்கு உறவினர், எனக்கும் உறவினர். அவர்கள் மும்பையில் வசிக்கிறார்களா என்றால், ஆமாம். (தற்போது சாட்சி பொன்னையா இங்கு வசிப்பதாக சொல்கிறார்.) என்னை எதிரி பாம்பேயில் அழைத்துச்சென்று அடைத்துவைத்திருந்ததாக சொல்லும்போது நான் எதிரி மறைத்து வைத்திருந்ததாக யாரிடமும் சொல்ல முயற்சி செய்தேனா என்றால், முயற்சி செய்தேன். இந்த விவரத்தை போலீஸ்விசாரணையில் சொன்னேன். நான் பாம்பேயில் இருந்தபோது போலீசார்அங்கு வந்தபோது என்னிடம் நான் காணாமல்போன மறுநாளே என் தாயார் புகார்கொடுத்து

கண்டுபிடிக்கவில்லை என்று அவர்களை தொந்தரவு செய்ததாகவும் என்னிடம் சொன்னார்கள். எனது தாயார் நான் காணாமல்போன மறுநாளே கொடுத்த புகார் அடிப்படையில் போலீசார் நடவடிக்கை எடுத்தார்களா என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. போலீசார் விசாரணையில் நான் கர்ப்பமாக இருந்தபோது உறவினர்கள் கர்ப்பத்தை கலைக்க சொன்ன விவரத்தை சொன்னேனா என்றால், நான் சொன்னேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்கள் தற்போது முதன்முதலில் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றாலும், போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய முதல் குழந்தை ஆண் குழந்தை. அது இறந்துவிட்டது. எனது குழந்தை இறந்தது சம்மந்தமாக பனையப்பட்டி காவல்நிலையத்தில் எனது தாயார் மீது ஒரு புகார் பதிவு செய்யப்பட்டு, அது சம்மந்தமாக என் தாயாரை கைது செய்தார்களா என்றால், ஆமாம். காவல்நிலையத்தில் நான்தான் புகார்கொடுத்தேன். நான் சொல்வதுபோல் எதிரி என்னை எங்கும் கூட்டிச்செல்லவில்லை என்றாலும், எனது உறவினர்கள் பாம்பேயில் நிறையபேர் இருக்கிறார்கள் என்றாலும், எனது பெற்றோர்கள்தான் என்னை பாம்பேயிக்கு அனுப்பிவைத்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிதான் என்னை பாம்பேயிக்கு அழைத்துச்சென்றார். எனது உறவினர்கள் பாம்பேயில் இருக்கும் விவரம் எனக்குத் தெரியாது. எதிரிமூலமாக எனக்கு குழந்தைகள் இருக்கிறார்கள் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இரத்த பரிசோதனை எடுக்க தயாராக உள்ளேன். நான் எனது பெற்றோர்கள் சம்மதத்துடன் பாம்பேயில் உறவினர்களுடன் இருந்தேன் என்றாலும், நான் அங்கு காணாமல்போய்விட்டேன் என்றாலும், ஏற்கனவே இருந்த முன்விரோதத்தை வைத்து எதிரிமீது பொய்யான ஒரு வழக்கை எனது தாயாரும், நானும் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இறந்துபோன குழந்தை எதிரிக்கு பிறந்த குழந்தை இல்லை என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் உண்மைக்கு புறம்பாக காலதாமதமாக பின்னிட்டு புகார்கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது தாயாரிடம் பனையப்பட்டி போலீசார்தான் தாமதமாக புகார்கொடுங்கள் என்று சொன்னார்களாம்.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*

# *DEPOSITION OF WITNESSES*

***(Chapter XXIII code of Criminal Procedure)***

***IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI***

***S.C. NO : 31/2018***

| | | |
|---|---|---|
| Deposition of witness for | - | PW - 3 |
| Name | : | திரு. ஸ்டாலின் |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| E-Mail ID | : | |
| Dated | : | 05.02.2021 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.02.2021.*

**முதல்விசாரணை:-**

நான் தற்போது தஞ்சாவூர் ராஜாமிராசுதாரர் மருத்துவமனையில் நுண்கதிர் பிரிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு திருமயம் நீதித்துறை நடுவர் உத்திரவின் படி ராதா, த/பெ. பொன்னையா வயது கண்டறியும் பொருட்டு தபாலுடன் ஆஜர்படுத்தப்பட்டார். நான் கடந்த 04.02.2004 அன்று புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில் நுண்கதிர் பிரிவு மருத்துவராக பணிபுரிந்தபோது, ராதா, த/பெ. பொன்னையா என்பவருக்கு வயது கண்டறியும் பொருட்டு அவரையும், அவருடைய நுண்கதிர் படங்களை ஆய்வு செய்தும், அந்த பெண் 04.02.2004 அன்று 17 வயதுக்கு மேலானவர் என்றும், 18 வயதிற்கு கீழானவர் என்றும் சான்று வழங்கினேன். நான் வழங்கிய சான்று அ.சா.ஆ.2. இதுசம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>**குறுக்குவிசாரணை:-**</u>

நான் பரிசோதனை செய்த ரிப்போர்ட்டுகளை காவல்துறையினர் பெற்றுக்கொண்டார்களா என்றால், பெற்றுக்கொண்டார்கள். நான் ராதா என்பவரின் வயதை கண்டறிய நான் ஆய்வு செய்த நுண்கதிர்படம் அந்த சிறுமியின் எலும்பு வயது குறித்து கண்டறிவதற்குத்தான் என்றால், ஆமாம். எலும்பின் வயதை பொறுத்து அந்த பெண்ணின் வயதை கண்டறியவேண்டும் என்றால், அந்த பெண்மணி நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கவேண்டும் என்றால், ஆமாம். நான் பரிசோதனை செய்த பெண்ணின் எடை, உயரம் போன்ற விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக அதை சான்றில் குறிப்பிடுவதில்லை. நான் நுண்கதிர்படம் எடுக்கவில்லை. 04.02.2004 அன்று நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. நான் அன்றையதினமே சான்று வழங்கினேன். அ.சா.ஆ.2-ல் 05.02.2004-ல் சான்று வழங்கியதாக கண்டுள்ளது என்றால், ஆமாம். நுண்கதிர்படம் எடுத்தது 04.02.2004, சான்று வழங்கியது 05.02.2004. காவல்துறையினர் என்னை அன்றையதினமே விசாரணை செய்தார்கள். நுண்கதிர் படங்களை காவல்துறையினரிடம் ஒப்படைப்பதில்லை. அறுதிட்டு என்னால் 18 வயதுக்கு குறைவானர் என்று கூறஇயலாது என்றால், 6 மாதத்திலிருந்து 1 வருடம் வரை வித்தியாசப்படும்.

<u>**மறுவிசாரணை**</u>**:-** இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*